# கலை மாலை 2003

மு/புதுக்குடியிருப்பு மகாவித்தியாலயம்
பழைய மாணவர் ஒன்றியம்

**M/PUTHUKKUDIYIRUPPU MAHA VIDIYALAYAM**
**OLD STUDENT ASSOCIATION**
**UNITED KINGDOM**

## CULTURAL EVENING

**18th of January 2003 Saturday 5.00 P.M.**

**at**
**Woolwich Town Hall**
**29-37 Wellington Street, woolwich, London SE18**


**ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமர்ப்பணம்



தமிழீழ விடுதலைப் போராட்டத்தில் உயிர் நீத்த
அனைவரதும் ஆத்ம சாந்திக்காக....



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# DE LILAH SUPER MARKET


## *Off Licence & Groceries*

உங்கள் அன்றாட வாழ்க்கைக்கு தேவையான
அனைத்துப் பொருட்களையும் பெற்றுக்
கொள்ள வேண்டிய ஒரே ஸ்தாபனம்

V. Ravichandran
**53, Brockly Rice,**
**Forest Hill, SE23 1JN.**
**T.P 020 8699 9560**

# SPAR

Convenience Store



◆ All Kinds Of Groceries ◆ Fruits & Vegetables
◆ International Phone Cards ◆ Mobile Phone Cards
◆ Beer wine and spirit

***At Competitive Prices***

***For All Your Requirements visit***

T. Sritharan
**No - 135 Cottimore Lane**
**Walton on Thames Surrey**
**KT12 2BL.**

Opening Hours
8.00 am - 10.00 pm 7 days a week



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாடசாலை கீதம்

புதுக்குடியிருப்பு மகாவித்தியாலயம்
புதுமையோடு இலங்கி வாழ்கவே
சைவ வித்தியா விருத்திச் சங்கம்
அன்புடன் போற்றி செல்வமேற்றிடும்

தங்கும் அரசின் முகமையை தழைத்து
பொங்குமார்வத்துடன் பிள்ளைகள் பயின்றிடும்
(புதுக்குடியிருப்பு)

கலைஞ்ஞானம் மெய்ஞ்ஞானம் விஞ்ஞானம் கற்போம்
விவசாயம் கைப்பணி விளையாட்டும் கற்போம்
தலைமைசேர் அதிபரை குரவரை மதிப்போம்
தலைமயின் காலத்துக் கௌரவம் காப்போம்
(புதுக்குடியிருப்பு)

அடவிசூள் பதியதன் அணிவிளக்காமெனக்
களனி சூழ் வயல் களம் முத்தென விளங்கும்
அலை கடல் மணலிலும் அனேக காலம்
அரிய சேவைகளை ஆற்றிட வேண்டும்
(புதுக்குடியிருப்பு)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# BROOK GENERAL STORE

***News Agent with Off Licence & Grocery***

***Opening Hours***

7.00am - 11.00pm 7Days a week

P. Swaranasingham

**36 Brooke Street Erith Kent**

**DA8 1J0**

T.P: 013 2233 5089

# West Port Wine

உங்கள் இல்லங்களில் நடைபெறும் வைபவங்கள் முதல் பெரு விழாக்கள் வரை சகல மதுபானத் தேவைகளுக்கும் வாசல் வரை விநியோகம் செய்யப்படும்.



**S. Arulrasa**

**1 West Port Street,**

**London E1 0RA**

**Tel: 020 790 4040**

**Delivery**

**Arul**

**07764 902 526**




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வித்தியாலய அதிபரின் ஆசியுரை

புதுக்குடியிருப்பு மகா வித்தியாலயத்தில் கல்வி கற்று ஐக்கிய இராச்சியத்தில் வாழ்ந்து வரும் புதுக்குடியிருப்பு பிரதேசச் சிறார்களின் இரண்டாவது வெளியீடாக வரும் "கலை மாலை" கண்டு பூரிப்படைகிறேன்.

2003 இல் வெளிவரும் இம் மாலையானது புதுக்குடியிருப்பு பிரதேசததின் கலை கலாச்சார வளர்ச்சி, புதுக்குடியிருப்பு மகாவித்தியாலயத்தின் தோற்றமும் வளர்ச்சியும் அதன் பௌதீக வள அபிவிருத்தி என்பவற்றை தாங்கி சிறப்பாக அமையும் என எதிர்பார்க்கின்றேன்.

கலை மாலையானது பற்பல மாலைகளாகி மணம் வீசி வெளிவர நல்லாசிகள் கூறுவதுடன் அதன் வளர்ச்சிக்கு உழைக்கும் ஐக்கிய இராச்சிய பழைய மாணவர் ஒன்றியம் மேன்மேலும் வளரப் பிரார்த்திப்பதுடன் வாழ்த்துக்களையும் பாராட்டுக்களையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

உங்கள் கல்விப் பசியைத் தீர்த்து நீங்கள் வளமுடன் வாழ வழிகாட்டிய புதுக்குடியிருப்பு மகாவித்தியாலத்திற்கு நீங்கள் வழங்கிய, வழங்கவிருக்கும் உதவிகளும் சேவைகளும் அளப்பரியது. அவற்றிற்கும் இச்சந்தர்ப்பத்தில் பாடசாலையின் சார்பில் நன்றிகளைத் தெரிவித்துக் கொள்வதில் மகிழ்கின்றேன்.

மற்றும் சிறப்பாக புகுந்த மண்ணாம் புதுக்குடியிருப்பில் அமைந்திருக்கும் கலையம்சங்களின் சிகரமாகத் திகழும் புதுக்குடியிருப்பு மகாவித்தியாலயத்தில் தொடர்ந்து 20 ஆண்டுகள் ஆசிரியராகவும் தற்போது அதிபராகவும் பணியாற்றிக்கொண்டிருக்கும் இத்தருணத்தில் தங்கள் "கலைமாலை" வெளியீட்டுக்கு ஆசிச் செய்தி வழங்கக் கிடைத்தமை பெரும் பேறெனை மகிழ்ந்து மனமார வாழ்த்துகின்றேன். பல்லாண்டு ஒன்றியம் வாழ எனது ஆசியும் வாழ்த்துக்களும் உரித்தாகட்டும்.வாழ்க . . . வாழ்க . . . வளமுட்டுக. . .

MRS. L. KUNASING AM
Principal
M/Puthukkudiyiruppu M. V
Mullaitivu.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# RAJ SUPER MARKET

News Agent
Off Licence and Grocery

*Opening Hours*
*6.30 A.M. - 10.00 P.M.*
*7 Days In The week*

K. Ratnarajah
**83 Maple Road**
**Pence SE 2O**



Favorite

# Favorite

Chicken & Ribs

**K. Sriskantharasa**
**Favorite Chicken & Ribs**
**29 Lee High Road,**
**Lewisham, SE13 5NS**
**Tel: 020 8297 9326**

Opening Hours 10.00 A.M. - 1.00 A.M.
Fri & Sat 10.00 A.M. - 2.00 A.M.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆசிச் செய்தி

03-12-2002

மு. புதுக்குடியுருப்பு

இன்று சதாதானம், சகவாழ்வு, போர்நிறுத்தம் என்று இரு தரப்பினரும் பேச்சுவார்த்தையில் மும்முரமாக ஈடுபட்டுக் கொண்டிருக் கின்றார்கள். உலகெல்லாம் பரந்து வாழும் ஈழத்தமிழ் மக்களுக்கு இது நிம்மதியளிக்கும் என்பதில் ஐயமில்லை. நாமும் அவ்வாறே எண்ணுவோம் இறையருள்துணைநிற்க.

உரிய நேரத்தில், உரியகாலத்தில், உலகிலேயே ஜனநாயகத் திற்கு வித்திட்டநாடான இங்கிலாந்தின் தலைநகரான லண்டன் மாநகரத்திலே ஒன்று கூடி பழைய மாணவர் ஒன்றியத்தை ஸ்தாபித்தீர்கள். இதன்மூலம், யுத்தத்தினால் சீரழிந்துள்ள எமது சமுதாயத்தினதும் வருங்கால சந்ததியினதும், மேம்பாட்டில் அக்கறை கொண்டிருப்பதையிட்டு நாம் மகிழ்வடைகின்றோம். ஏற்கனவே நீங்கள் ஆரம்பித்த பணி புதுக்குடியிருப்பு மகா வித்தியாலய மாணவர்களுக்கு பெரிதும் நன்மைளித்துள்ளது.

வன்னி மண்ணின் அழகையும், செழுமையையும், வாழ்வையும், வாழ்வின் இனிமையையும், கற்புக்குலையாத பெண்போன்று காத்துநிற்பது உங்கள் புதுக்குடியிருப்புப் பிரதேசமொன்றுதான் என்பதில் நீங்கள் நிம்மதியடைவீர்கள். இதற்குக் காரணம் உங்களைப் போன்றோரின் நல்எண்ணமும் தெய்வசங்கற்பமும் ஆகும். ஏனென்றால் வன்னி மண்ணின் மற்றைய பிரதேசங்களும் சரி யாழ்குடாநாடும் சரி. எங்கும் கண்ணி வெடிகள், மிதி வெடிகள். அடுத்த அடியை எங்கு வைப்பதென்ற அச்சம், எங்கும் இடிபாடுகள், வளம் தரும் வானுயர்ந்த மரச்சோலைகளின் அழிவு என்று இப்படி.

இம்மன்றத்தை ஸ்தாபிக்க காரணமாயிருந்தவர்களே! மன்றத்தின் ஏனைய உறுப்பினர்களே!! இதுவரை நீங்கள் ஆற்றிய பணி ஆரம்பப்பணிதான் என்பது எம்மனக்கண்முன் தோன்றுகிறது. ஆண்டு 2005, புதுக்குடியிருப்பு மகாவித்தியாலயம் பொன்விழாவை எட்டிக்கொண்டிருக்கிறது என்பதை உங்கள் கவனத்தில் வைக்க கடமைப்படுகின்றோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்த இடைக்காலத்தில் இன்னுமொரு பணி காத்திருக்கிறது. இங்கு எல்லாப் பாடசாலைகளும் தேசிய பாடசாலைகளாக தரமுயர்த்தப்பட்டுக் கொண்டிருக்கின்றன. இதுவரை இந்த நாட்டில் 300 பாடசாலைகள் தரமுயர்த்தப்பட்டிருக்கின்றன. இதற்குள்ள தகமைகளில் ஒன்று நீங்கள் ஸ்தாபித்த பாடசாலையின் பழைய மாணவர்கள் ஒன்றியங்கள் வெளியில் இருப்பது என் அன்புக்குரிய மாணவச் செல்வங்களே நீங்கள் அதிர்ஷ்டசாலிகள்!

அண்டைநாடான இந்தியாவிலும் சரி, ஏனைய ஐரோப்பிய நாட்டிலும், அவுஸ்திரேலியா, கனடா, போன்ற நாடுகளிலும் சரி இடம்பெயர்ந்து வாழும் ஈழத்தமிழர்களிலும் பார்க்க உங்களுக்கு பெருவாய்ப்பு என்னவெனில் உங்களில் சிலர் விட்டுச் சென்ற கல்வியைத் தொடரவும் உங்கள் மழலைச் செல்வங்களுக்கு உரிய கல்வியை ஊட்டவும் லண்டன் மாநகரைவிடச் சிறந்த இடம் வேறொன்றும் இல்லை, இல்லை, இல்லை என்பது தான்!

இதைப்பயன்படுத்தி, ஆங்கிலம், விஞ்ஞானம், தொழில்நுட்பம், கொம்பியூட்டர், போன்ற இன்றைய உலகிற்கு ஈடுகொடுக்கக் கூடிய கல்வியைப் பெறுவீர்களாக.

நீங்கள் ஒருநாள் இந்த மண்ணில் காலடி வைக்கத்தான் போகிறீர்கள். அப்போது கல்வி கற்ற உங்கள் பிள்ளைகளால் இந்தக் கல்விநிறுவனம் நிரம்பி வழியும் நிறைவு பெறும். என்று கனவு காண்கிறோம். இதற்கான நல்லாசிகள் பல.

மீண்டும் "கலைமாலை" நிகழ்வுகளின் மூலம் தமிழர்பண்பாடும் கலை கலாச்சாரம், என்பவற்றைப் பேணும் வாயிலாக பாரதி அன்று கண்ட கனவை நனவாக்குவதையிட்டு தமிழ் கூறும் நல்லுலகம் உங்கள் மன்றத்திற்கு நல்லாசிகளைப் பொழியட்டும்.

> "தேமதுரத்தமிழோசை உலகமெலாம் பரவும் வகை செய்தல் வேண்டும்"
>
> -மகாகவிபாரதி

என்றும் என் ஆசிகள் உங்களுக்கு உரித்தாகட்டும்.

இவ்வண்ணம்,
உங்கள் ஆசிரியா, திரு. க. சிதம்பரப்பிள்ளை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எமது எண்ணம்!

*“கற்கை நன்றே கற்கை நன்றே*
*பிச்சை புகினும் கற்கை நன்றே” என நீதி நூலும்*
*“கற்றார் அறிவிடையார் கல்லா தார்*
*முகத்திரண்டு புண்ணு டையார்”*

என்று வள்ளுவரும் கூறியமை மனித வாழ்வில் கல்வியினுடைய முக்கியத்துவத்தை உணர்வதற்கு சிறந்த உதாரணமாகும். அதனால்த்தானோ என்னவோ ஈழத்தமிழக்கள் எத்தனை பல துன்பங்கள் துயரங்கள் நேர்ந்தாலும் கல்வியை தமது இரு கண்களாக காப்பாற்றுகின்றார்கள். இடம் பெயர்வுகளின் போதும், பதுங்கு குழி வாழ்விலும், பொருளாதரத் தடையிலும், அவர்கள் தமது கல்வியை வளர்ப்பதிலும், போதிப்பதிலும் முன்னிலையில் நிற்பது கவனிக்கத்தக்கது. எமது கிராமத்தில் உள்ள கல்விச் சிறார்களும், கல்வி வழங்குனர்களும், பல நெருக்கடிகளைச் சந்தித்த போதும், அவற்றில் இருந்து தேறி, தம்மை திடப்படுத்தி வந்திருப்பதை நாம் கண்டுள்ளோம். புலம் பெயர்ந்த நாடுகளில் வாழும் பழைய மாணவர்கள் மேற்படி நிலையில் உள்ள தங்களுடைய உறவுகளின் கல்வி நடவடிக்கைகளுக்கு உந்து சக்தியாக இருக்க வேண்டியது காலத்தின் கட்டாயமாகும். ஐக்கிய இராச்சியத்தில் வாழும் முல்லைத்தீவு புதுக்குடியிருப்பின் பழைய மாணவர்கள் ஆகிய நாம், எங்களுக்குகென ஓர் ஒன்றியத்தை 2000ம் ஆண்டில் உருவாக்கினோம். எமது பாடசாலையின் அடிப்படைத் தேவைகளின் பட்டியல் நீண்டிருப்பது எமக்குள்ள ஒரு பெரும் சவாலாக அமைந்துள்ளது. அவற்றில் முழுத் தேவைகளையும் ஒரே நிலையில் பூர்த்தி செய்ய நினைப்பது அறிவின்பால் பட்டதல்ல என்பதால், மிக முக்கியமானதாகக் கருதிய மலசல கூடம், குழாய் நீர் விநியோகம், என்பவற்றை ஏற்படுத்தியதோடு வறிய மாணவர் நிதியம் ஒன்றையும் உருவாக்கி முதல் தர தேவைகளை கடந்த காலங்களில் பூர்த்தி செய்தோம். சம காலத்தில், “கலை மாலை” என்ற ஒன்று கூடல் நிகழ்வினை நடாத்தி, எமது திட்டங்களுக்கான அத்திவாரத்தை அமைத்துக்கொண்டு செல்கின்றோம். இக் கலைமாலை, வெறுமனே


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொழுது போக்கு நிகழ்வாக அமைந்துவிடவில்லை, பழைய மாணவர்களின் அங்கத்துவத்தை அதிகரித்தல், ஒன்று கூடுதல், பங்களித்தல், சிந்தித்தல் போன்ற செயற்பாடுகளோடு, எதிர்கால சந்ததியை எமது பாடசாலை நோக்கிய நினைவிற்கு இட்டுச் செல்லுகின்ற முக்கிய பணியினையும் இக் கலை மாலை நிகழ்வுகள் ஏற்படுத்திச் செல்வதைக் காண முடிகின்றது. புலம் பெயர்வுகள் தொடர்ந்து இடம் பெறும் என்றோ, வெளிநாடுகளில் பழைய மாணவர்கள் தொடர்ந்து வருவார்கள், அவர்கள் இவ் ஒன்றியத்தை வழி நடாத்துவார்கள் என்றோ காத்திருக்காது இன்று இங்கு இருக்கக்கூடிய எமது இளம் சிறார்கள் அந்தப் பணியை தொடர்வதற்கு வழி காட்டிச் செல்ல வேண்டிய வரலாற்றுக் கடமையில் நாம் இருக்கின்றோம். அதை செய்வதற்கு இந்த கலை மாலை நிகழ்வுகள், மிகவும் பொருத்தமானதாக அமைந்துள்ளது என்பது எமது நிலைப்பாடாகும்.

எமது பாடசாலையில் வரலாற்றுப் பதிவுகளை ஆவணப்படுத்தி, நிறைவு பெற இருக்கின்ற பொன்விழாக் காலத்தில், பொன்விழா ஞாபகார்த்த மண்டபத்தை உருவாக்கி, தேசிய பாடசாலை பட்டியலில் எமது பாடசாலையையும் சேர்த்துக் கொள்ள உழைக்க வேண்டியவர்களாக நாம் இருக்கின்றோம். இப்பணிகள் மிகவும் கடினமானவையாகவும் காலம் தாழ்த்தி சிந்திக்கப்பட்டவையாகவும் இருந்தாலும் ஒன்றுபட்ட உழைப்பின் மூலம் இதைச் சாதிக்க முடியும் என்பது எமது எண்ணமாகும். எமது எண்ணம் நிறைவேறி, எமது மண்ணில் மீண்டும் நாம் காலடி எடுத்து வைக்கும் போது, நன்றி மிகுதியால் அவை எம்மை வரவேற்கும். இவை தான் நம் வாழ் நாளில் சாதித்ததின் முழு அறுவடை என்பது எமக்கு புரியும்.

தா. தனபாலசிங்கம்
தலைவர்
2002 - 2003.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மு /புதுக்குடியிருப்பு மகாவித்தியாலயத்தின் பாதையில் பழைய மாணவர்கள்

**இ**லங்கையின் வடமாகாணத்தின் தென்கிழக்கு அமைவாக 1978 முதல் உருவாக்கப்பட்ட நிர்வாக மாவட்டங்களில் ஒன்றாகவும், நான்கு வன்னி தேர்தல் மாவட்டத்தில் ஒன்றாகவும் அமைவு பெற்று விளங்கும் முல்லைத்தீவு மாவட்டத்தில் மிகவும் பெரிய கிராமமாக பரப்பளவு சனத்தொகை என்பவற்றை கொண்டு விளங்கும் ஒரு பிரதான கிராமமாக புதுக்குடியிருப்பு கிராமம் காணப்படுகின்றது. இங்கு பூர்வீக குடிகளாக பிரித்தானிய சாம்ராச்சியத்தின் சூழ்ச்சியினால் கொல்லப்பட்ட கடைசி வன்னி மன்னன் பண்டார வன்னியனின் வழிவந்தவர்கள் காணப்படுவதுடன், தமிழ் ஈழத்தின் வடக்கில் இருந்து இடம் பெயர்ந்த மக்களும் இங்கு தற்போது குடிமக்களாக காணப்படுவதுடன், அண்மைக்காலங்களில் தென்தமிழீழ மக்களும் இக்கிராமத்தில் பெருமளவில் இடம் பெயர்ந்து தமக்கு பாதுகாப்பை தேடி குடியேறிய ஒரு கிராமமாக காணப்படுகின்றது. இதன் இட அமைவை கீழ்வரும் இலங்கைப் படத்தில் காணலாம்.






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப் புதுக்குடியிருப்புக் கிராமத்தின் முதுகெலும்பாக இக்கிராமமக்களின் கல்வி வளர்ச்சிக்கும், அத்துடன் தொடர்பாக பொருளாதார கலாச்சார விருத்திக்கும் காரணமாகவும் விளங்கும் ஒரு சின்னமாக புதுக்குடியிருப்பு மகாவித்தியாலயம் காணப்படுகின்றது. இன்று இக்கிராமத்தில் வாழும் 15000ற்கு மேற்பட்ட இவ்வூர் மக்களினது பிள்ளைகளின் கல்வி கலாச்சார மேம்பாட்டுக்கும், அண்மைக்காலங்களில் இடம் பெயர்ந்த மக்களின் பிள்ளைகளின் கல்வி வளர்ச்சிக்கும் நிலைக்களனாக இப்பாடசாலை தனது பணியை தொடர்ந்து வருகிறது. வன்னி மாவட்டத்தில் 2200க்கு மேற்பட்ட மாணவர்களையும் 65 ஆசிரியர்களையும் கொண்டு கடினமான காலத்திலும் தொடர்ந்து மாணவர்களை பல்கலைக்கழகங்களுக்கு அனுப்பிக் கொண்டிருக்கும் ஓர் பெரிய பாடசாலையாக இது காணப்படுகின்றது. நெருக்கடியான சூழலிலும் பெரும் கஷ்டங்களுக்கு மத்தியில் பணியாற்றிவரும் புதுக்குடியிருப்பு மகாவித்தியாலயத்தை தமிழீழ வரலாற்றில் உலகம் அறியும்.

ஒரு பாடசாலையின் கல்வி வளர்ச்சியை

- அதன் தோற்றம்
- கல்வித்தரம்
- மாணவர் தொகை
- ஆசிரியர்களின் எண்ணிக்கை
- வகுப்புகளின் நிலை/தரம்

என்பவற்றின் அடிப்படையில் மதிப்பிட முடியும். முல்லைத்தீவு மாவட்டத்தின் கல்வி முன்னேற்றத்தை எடுத்தியம்பும் இரண்டு பாடசாலைகளாக புதுக்குடியிருப்பு மகாவித்தியாலயமும் வித்தியானந்தாக் கல்லூரியும் விளங்குவதை இனங்காட்டுவது பொருத்தமானதே.

1955ம் ஆண்டு ஸ்ரீ சுப்பிரமணிய வித்தியாசாலை என ஆரம்பிக்கப்பட்ட இப்பாடசாலை 2005ம் ஆண்டு பொன்விழா காணும் பாடசாலையாக காணப்படுவதுடன், தமிழீழத்தில் வன்னியில் ஒரு பெரிய பாடசாலையாகவும் காணப்படுகின்றது. 1960ம் ஆண்டு முதன் முதல் க. பொ. த உயர்தர வகுப்புகள் இங்கு ஆரம்பிக்கப்பட்டு 1963ம் ஆண்டு முதலாவது மாணவர் தொகுதியை பல்கலைக்கழகம் அனுப்பியது. கடந்த நான்கு தசாப்தங்களுக்கு மேலாக நேர்கணிய போக்கையே பின்வரும் காரணிகளான


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- ✧ மாணவர் தொகை
- ✧ தரநிலை உயர்வு
- ✧ பரீட்சை பெறுபேறுகள்
- ✧ பல்கலைக்கழக அனுமதிகள்
- ✧ விளையாட்டு சாதனைகள்
- ✧ கலை கலாச்சார சாதனைகள்

✧ தேசிய ரீதியான போட்டி நிகழ்வு சாதனைகள் என்பவற்றின் புள்ளி விபரங்கள் உறுதி செய்து நிற்கின்றன.

1963ம் ஆண்டிலிருந்து தொடர்ந்து இன்றுவரை ஒவ்வொரு வருடமும் மாணவர்களை பல்கலைக்கழகத்துக்கு அனுப்பிக் கொண்டேயிருக்கிறது. 1975ம் ஆண்டிலிருந்து இப்பாடசாலையின் வளர்ச்சி துரிதப் படுத்தப்பட்டது. 1980ம் ஆண்டில் முதலாவது மருத்துவத்துறை மாணவன் பல்கலைக்கழகம் புகுந்தார். இதைவிட இப்பாடசாலை பொறியியல் கலை, விஞ்ஞானம், கல்வியியல், வணிகம், முகாமைத்துவம், விவசாய விஞ்ஞானம், மிருக வைத்தியம், நுண்கலை என பல்வேறு துறைகளுக்கு மாணவர்களை பல்கலைக்கழகத்துக்கு அனுப்பிவருவதுடன் இன்று வரை 500க்கு அதிகமான பட்டதாரிகளை உருவாக்கியதுடன் தொழில் நுட்பக் கல்லூரிகளுக்கும் வருடாவருடம் மாணவர்களை அனுப்பி வருகிறது.

1990-2002 காலப்பகுதியில் இலங்கை வடக்கு கிழக்கு போர்ச்சூழல் வன்னிப்பிரேதசத்தின் கட்டமைப்பையே சீரழித்ததை உலகம் அறியும். இக் காலத்தில் புதுக்குடியிருப்பு மகாவித்தியாலயம் பல சவால்களையும் இன்னல்களையும் அனுபவித்தது. அவ் இன்னல்களை இங்கு வார்த்தைகளால் விபரிக்க முடியாது. ஆனாலும் புதுக்குடியிருப்பு மகாவித்தியாலயத்தின் கல்வித்தரம் குறையவில்லை. யாழ்குடா நாட்டிலிருந்தும் வன்னியின் பாதுகாப்பு குறைவான பகுதிகளில் இருந்தும் மற்றும் தென்தமிழீழமான மட்டக்களப்பு, திருகோணமலையில் இருந்தும் இடம் பெயர்ந்து அகதிகளாக புதுக்குடியிருப்பு கிராமத்துக்கு வந்த 50,000(ஐம்பதாயிரம்)ற்கு மேற்பட்ட மக்களுக்கு புகலிடம் கொடுத்து, இக்காலத்தில் 1500க்கு மேற்பட்ட புலம் பெயர்ந்த மாணவர்களுக்கு கல்வியறிவூட்டிய வரலாற்றுப் பெருமை புதுக்குடியிருப்பு மகா வித்தியாலயத்தையே சாரும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புதுக்குடியிருப்பு மகாவித்தியாலயத்தில் கல்வி கற்ற பழைய மாணவர்கள் இலங்கையின் நாலா பக்கங்களிலும் உயர் நிலை பதவிகளில் பணியாற்றுகின்ற அதேவேளை 2000க்கு மேற்பட்ட பழைய மாணவர்கள் உலகம் முழுவதும் பரந்துவாழ்ந்து தொழில் புரிகின்றனா; கல்வி பயில்கின்றனர். இந்தப் பின்னணியில் தான் புதுக்குடியிருப்பு மகா வித்தியாலயத்தின் முன்னேற்றத்திற்கான பங்களிப்புகாரணிகள் பற்றிய சிந்தனை எழுகிறது. புதுக்குடியிருப்பு மகா வித்தியாலயத்தின் 50வருட கால முன்னேற்றத்திற்கான பங்களிப்பு காரணிகளை ஆராய வேண்டுமாயின் அப்பங்களிப்பிபு செய்தவர்களை பின் வரும் மூன்று அடிப்படையில் வகைப்பாடு செய்து ஆராயலாம்.

- யாழ்ப்பாணத்தை சேர்ந்த அதிபர்கள், ஆசிரியர்கள்.
- முல்லைத்தீவு மாவட்டத்தை சேர்ந்த அதிபர்கள், ஆசிரியர்கள்.
- புதுக்குடியிருப்பு மகாவித்தியாலயத்தின் பழைய மாணவர்கள்.

1975ம் ஆண்டிற்கு முன் 90 வீதமான பங்களிப்பு யாழ். குடா நாட்டு அதிபர் ஆசிரியர்களையே சாரும். இதை பாடசாலை பதிவுகளில் இருந்து உறுதிப்படுத்த முடியும். 1975க்கு பின்னர் முல்லைத்தீவு மாவட்டத்தை பிறப்பிடமாக கொண்ட அதிபர்கள் ஆசிரியர்களினது பங்களிப்பு அதிகமான பங்களிப்பை நல்கியதுடன் யாழ் குடாநாட்டு ஆசிரியர்களின் பங்களிப்பும் இருந்து வந்துள்ளது. இது உண்மையில் மிகவும் அதிஸ்டகரமானதாகும். தவிர இன்று இப்பாடசாலையில் கல்வி கற்று ஆசிரியர்களாக அதிபர்களாக பணியாற்றிய பலர் இன்று முல்லைத்தீவு மாவட்ட உதவிக் கல்விப் பணிப்பாளர்களாக இருக்கும் திரு. சரவணபவன், திரு. பேரின்பநாயகம், திரு. நாகரத்தினம், திரு. திருச்செல்வராசா, திரு. ஆறுமுகம் ஆகியோர் குறிப்பிடக் கூடியவர்கள் என்பதுடன் 1975க்கு பின் இப்பாடசாலையின் வளர்ச்சிக்கு பங்களித்த முல்லை மாவட்டத்தை பிறப்பிடமாக கொண்ட அதிபர்களான திரு. ஏ. கே. மகாலிங்கமும் திரு. பொ. க. சிவலிங்கமும் குறிப்பிடத் தக்கவர்கள்.

1980களின் பின்னர் இப்பாடசாலையின் முன்னேற்றத்தில் அதன் பழைய மாணவர்களின் பங்களிப்பும் ஈடுபாடும் அளப்பரியது. யுத்த சூழலினால் புதுக்குடியிருப்பை விட்டு புலம் பெயர்ந்து வெளிநாடுகளில் வாழும் புதுக்குடியிருப்பு மகாவித்தியாலயத்தின் பழைய மாணவர்கள் இந்த


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாடசாலையின் வளர்ச்சிக்காக ஆற்றி வரும் பங்களிப்பு இப்பாடசாலையின் வரலாற்று ஏட்டில் ஓர் அத்தியாயத்தை தோற்றுவித்துள்ளது. 1990க்குப்பின் புதுக்குடியிருப்பிலிருந்து புலம் பெயர்ந்து வெளிநாடு சென்றோர் மூவாயிரத்துக்கு மேற்பட்டோர். அதில் பிரித்தானியாவில் ஆயிரத்துக்கு கூடுதலானவர்களும் மற்றும் பிரித்தானியா தவிர்ந்த ஐரோப்பிய, ஸ்கன்டிநேவியா நாடுகளிலும் மற்றும் கனடா, மத்திய கிழக்கு நாடுகளிலும் வாழ்ந்து வருகின்றனர்.

புலம் பெயர்ந்து ஐக்கிய இராச்சியத்தில் வாழும் புதுக்குடியிருப்பு மகாவித்தியாலய பழைய மாணவர்கள் தம் மண்ணையும், தம் பாடசாலையையும் வன்னியின் வாழ்க்கை பாரம்பரியங்களையும் வன்னி மக்களையும், மற்றும் வன்னியின் கலைபண்பாட்டு கலாச்சார காரணிகளையும் மறக்காது தாம் கற்றபாடசாலையின் எதிர்கால வளர்ச்சியை கருத்தில் கொண்டு லண்டனில் தமக்கென ஒரு ஒன்றியத்தை அமைத்து தமது கிராமத்தின் விருத்தியை தம் பாடசாலைவிருத்தி ஊடாக முன்னெடுக்க முடியும் என்ற நம்பிக்கையில் சேவையாற்றி வருவதை நேரடியாக காணமுடிகிறது. இது உண்மையில் வியப்பிற்குரியது.

2002ம் ஆண்டு வட அயர்லாந்துக்கு University of Ucster இல் குறுகிய கால கற்கை நெறி ஒன்றுக்காக சென்ற போது லண்டனுக்குப் போக வாய்ப்புக்கிட்டியது. அப்போதுதான் புதுக்குடியிருப்பு மகாவித்தியாலயத்தின் பழைய மாணவர்களையும் அவர்களின் சங்க பிரதிநிதிகளையும் சந்திக்கும் வாய்ப்பு கிட்டியது. இவர்களிடம் கருத்துக்களை பரிமாறி நேர்காணல் செய்த போது அவர்களின் பழைய மாணவர் சங்கம் பற்றியும் அதன் செயல்பாடுகள் பற்றியும் பல தகவல்களை பெற்றேன். அதை இங்கு குறிப்பிடுவது அவசியம் என எண்ணுகிறேன். "மு/புதுக்குடியிருப்பு பழைய மாணவர் சங்கம் ஐக்கிய இராச்சியம்" (M/Puthukkudiyiruppu Mahavidiyalayam Old Students Association UK) என்ற பெயரில் 2000ம் ஆண்டு மாதம் 5ம் திகதி திரு. ச. முருகையாவினால் அங்குரார்ப்பணம் செய்யப்பட்டு, தொடக்கப்பட்டு தொடர்ந்து ஒவ்வொரு வைகாசி மாதத்திலும் புதிய நிர்வாகம் தெரிவு செய்யப்பட வேண்டும் என தீர்மானிக்கப்பட்டு தொடர்ந்து வருவதுடன் இதற் கென தலைவர், செயலாலர் பொருளாளர் உட்பட ஒரு நிர்வாக செயற்குழு தொடர்ந்து இயங்கிவருவதையும் இதன் தற்போதைய நடைமுறையாண்டு நிர்வாக தலைவராக திரு. தா. தனபாலசிங்கமும், செயலாளராக திரு. த. ஸ்ரீபாஸ்கரனும், பொருளாளராக திரு. சி. தவசீலனும் பணியாற்றுவதுடன்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நூற்றுக்கு மேற்பட்ட அங்கத்தவர்களின் நிதிப்பங்களிப்புடன் பாடசாலையின் விருத்திக்கு பங்களிப்பு செய்து வருகின்றனர். இச்சங்கத்தின் ஐக்கிய இராச்சியம் வாழ் புதுக்குடியிருப்பு மகாவித்தியாலய பழைய மாணவர்களிடையே ஒரு ஒருங்கிணைப்பை ஏற்படுத்தி அவர்களின் இளம் சந்ததியினருக்கு எம் மொழி, மத, கலை, பண்பாட்டு கலாசார தன்மைகளை புகட்டி இவை தொடர்ந்தும் எம் சமுதாயம் வாழ வழிவகுப்பதும் எம் பாடசாலையின் எதிர்கால உறுதியான வளர்ச்சிக்கு பல திட்டங்களை வகுத்து அவற்றினுடாக எம்கிராம வளர்ச்சிக்கு வழி கோலுவதும் பிரதான நோக்கங்களாக கொண்டு செயல்பட்டுவருகிறது.

கடந்த இரண்டு வருடங்களில் புதுக்குடியிருப்பு மகாவித்தியாலயத்தின் வளர்ச்சிக்காக 2200 மாணவர்கள் பயிலும் பாடசாலைக்கு மலசலகூட வசதி இல்லாத பெருங்குறையை தீர்க்க மலசல கூட வசதியை செய்து கொடுத்தனர். தொடர்ந்து ஒரு கிணற்றில் இருந்து இவ்வளவு பெரிய தொகையளவு மாணவர்கள் குறித்த அரைமணி இடைவெளியில் தாகசாந்தி செய்வது மிகவும் கடினம் என்பதை கருத்தில் கொண்டு 5000 லீற்றர் கொள்ளளவுள்ள நீர்த்தாங்கி ஒன்றை அமைத்ததுடன் வறிய மாணவர் கொடுப்பனவு நிதியம் ஒன்றை அமைத்து, ஒரு இலட்சத்து ஐம்பதாயிரம் ரூபாவினை வைப்பிலிட்டு, அதிலிருந்து பெறும் வட்டிப் பணத்தின் மூலம் வருடா வருடம் முப்பதிற்கும் மேற்பட்ட வறிய மாணவர்களுக்கு கல்வி உபகரணங்களை வழங்கி, அவர்களுடைய கல்வி நடவடிக்கைகளுக்கு உதவி செய்து வருகின்றனர். அத்துடன் 2005ம் ஆண்டு பொன்விழாகாணும் நேரம் ஒரு பொன்விழா நினைவு மண்டபத்தை பெரும் செலவில் அமைக்க திட்டமிட்டு அதை உருவாக்க நடைமுறை நிர்வாக சபையினர் மிகவும் கடுமையாக உழைத்து வருவதுடன் இச்சங்கத்தில் இருக்கும் உறுப்பினர்களின் தாராள உதவிகளினால் இச்சங்கம் தன் திட்டங்களை செவ்வனே செய்யும் என்ற உறுதியும் உண்டு என்பதை அறிய முடிந்தது.

இலண்டனில் உள்ள புதுக்குடியிருப்பு மகாவித்தியாலய பழைய மாணவர்கள் செய்கின்ற இந்தப்பணி வியக்கத்தக்கது. இவர்களே தொடர்ந்து இதே போன்றே பிரான்ஸ் நாட்டு பழைய மாணவர்களும் கனேடிய நாட்டு பழைய மாணவர்களும் இதுவரை பாடசாலை வளர்ச்சிக்கு குறிப்பிடக்கூடிய சில பங்களிப்பை செய்துள்ளமை குறிப்பிடக்கூடிதாகும். புலம் பெயர்ந்து இலண்டன் வந்த எம் உறவுகள் நாம் நினைப்பது போல் சுலபமாக பணம்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சம்பாதிக்கவில்லை. இயந்திர மயமான வாழ்க்கை சூழலிலும் கடினமான காலநிலை சூழலிலும் ஒய்வு உறக்கம் இன்றி படுகின்ற துயரங்களை வார்த்தைகளில் விபரிக்க முடியாது. தவிர உழைப்பின் 40%க்கு மேல் வரியாக செலுத்தி விட்டு மிகுதிப்பணத்தில் தம் வாழ்வையும் தாயகமண்ணில் தம் குடும்பத்தார் வாழ்வையும் நிர்வகித்து தம் பாடசாலைக்கும் உதவி செய்கின்றார்கள் என்றால் இப் பெருந்தன்மை அவர்களின் வாழ்க்கைச் சூழலில் மிகவும் கடினமானதொரு தியாகம் என்றே கருதுகின்றேன். இதை எழுத்தில் கூறினால் புரிவது கடினம் நேரடியாக அனுபவப்படும் பொழுதே இதன் உண்மை புரியும். அவ்வாறு அவர்கள் பல கஸ்டங்களுக்கும் மத்தியில் எம் பாடசாலை வளர்ச்சிக்கு அனுப்பப்படும் ஒவ்வொரு சதமும் வினைத்திறன் கொண்டதாக செலவு செய்யப்படவேண்டும். அப்பொழுதுதான் இவர்களின் அர்ப்பணிப்பு அர்த்தமுள்ளதாக இருப்பதுடன் எம் பாடசாலையின் வளர்ச்சியும் அதிகமாகும். அவர்களின் அர்ப்பணிப்புக்கு இந் நோக்கங்கள் இருப்பதை அவதானிக்கலாம்.

✧ எத்தனையோ கஷ்டங்களுக்கு மத்தியில் இவர்கள் தம் ஊரையும் தாம்கற்ற பாடசாலையையும் முன்னேற்ற பங்களிப்பை செய்கின்றனர்.

✧ இவர்கள் அனுப்பும் ஒவ்வொரு சதமும் சரியான திட்டமிடலுடன் வினைத்திறன் கூடியதாக செலவிடப்பட்டு பாடசாலையின் தரம் உயர வேண்டும் என்ற நோக்கமுமாகும். இதை பாடசாலை நிர்வாகமும், பாடசாலை அபிவிலுத்திச் சங்கமும், பெற்றோரும் கருத்தில் கொண்டு செயல்பட்டு தொடர்ந்தும் வெளிநாடுகளில் இருந்து இவ்வாறான பழையமாணவர் சங்கங்களின் உதவிகளை பெற்று எம் பாடசாலையையும் எம் ஊரையும் ஓர் முற்போக்கு கிராமமாக மாற்ற முற்படவேண்டும் என சம்பந்தப்பட்ட அனைவரையும் கேட்டுக் கொள்வதுடன், புலம் பெயர்ந்த பழைய மாணவர்களுக்கும் பாடசாலைக்கும் இதனூடாக ஒரு பாலத்தை அமைத்து தொப்புள் கொடி உறவும் தாயக மண்ணின் பற்றும் புலம்பெயர்ந்த நாடுகளில் வாழும் எமது கிராம வருங்கால சந்ததிக்கும் தொடர இவை போன்ற அமைப்புகள் ஆதரவாக விளங்கும் எனபதிலும் எதுவித ஐயமுமில்லை.

கட்டுரையாளர்
திரு. பொ. சிங்கரத்தினம் M.A
விரிவுரையாளர், ஸ்ரீ பாத கல்விக்கல்லூரி, இலங்கை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

MILLENIUM FRIED CHICKEN



S. Parameswran

**360 Clapham Road**
**London SW9 9AR**

MORLEY'S

S. Matheswaran

**176 Batter Sea Parle Road,**
**Batter Sea, SW11 4ND.**
**Tel: 020 7622 1462**

Opening Hours 11.00 A.M. - 2.00 A.M.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எமது நோக்கமும் செயல்பாடுகளும் எதிர் கால திட்டங்களும் . . .

"பெற்ற தாயும் பிறந்த பொன்னாடும் நற்றவர் வானினும் நனிசிறந்ததுவே"

தாயகத்தில் இருந்து பல்லாயிரம் மைல்களுக்கு அப்பால் பல்வேறுபட்ட பிரச்சினைகளுக்கு மத்தியில் இயந்திர மயமான வாழ்க்கையில் இரண்டறக்கலந்து இயங்கிக் கொண்டிருக்கும் நாம், எமது கிராமத்தையும் கிராமத்தின் பசுமை நினைவுகளையும் நாம் கற்ற பாடசாலையையும் மறக்க முடியாது என்பது உண்மைதான். அதுமட்டுமன்றி ஒரே ஊர் ஒரே பாடசாலையில் ஒன்றாகப் படித்த நாம் அன்னிய தேசத்தில் ஒன்றாக இணையும் போது எமது எண்ணங்களை ஊர் நினைவுகளை பகிர்ந்து கொள்ளும் போது அதில் ஓர் தனி நிம்மதி. இது எம்முடன் மட்டுமன்றி எமது பாரம்பரியம், கலை, மொழி, பண்பாடு என்பன எம் சந்ததியையும் தொடரவேண்டும் என்ற பேரவாவின் உந்தலால் தோற்றுவிக்கப்பட்டதே எம் இந்த பழைய மாணவர் ஒன்றியம். இதனூடாக எமது பாடசாலையின் விருத்திக்கு எம்மாலான பயனுள்ள திட்டங்களை செயல் படுத்த நிதி உதவிகளும், ஆலோசனைகளும் வழங்குவதனை நோக்காகக் கொண்டு செயல்பட்டு வருகிறோம்.

இரண்டாயிரமாம் ஆண்டு பங்குனிமாதம் 5ம் திகதியில் இருந்து இயங்கிவரும் எம் ஒன்றியம், கடந்த காலத்தில் எம்பாடசாலையின் பல அத்தியாவசிய நெருக்கடிகளைக் கருத்தில் கொண்டு செயல்பட்டு, எம்மிடயே எமது அங்கத்தவர் சந்தா மூலம் பெற்றபணத்திலிருந்து இரு மலசல கூடத் தொகுதியையும், 5000 கன அடி கொள்ளவுள்ள நீர்தாங்கி ஒன்றையும் அமைத்ததுடன், 32 வறிய மாணவர்களுக்கு நிரந்தர நிதிவுதவியளித்ததுடன், ரூபா ஒரு லட்சத்தி இருபத்தி ஐயாயிரத்தை வறிய மாணவர் நிதிக்காக பாடசாலை வங்கிக் கணக்கில் நிரந்தர வைப்பிலிட்டுள்ளது. இதைவிட கடந்த 19-01-01ல் லண்டன் வாழ் புதுக்குடியிருப்பு மகாவித்தியாலய பழைய மாணவர்களுக்கான ஒன்றுகூடல் ஒன்றை சிறப்புற நடத்தினோம். இது பலரின் மனதிலும் பல விதமான கேள்விகளை எழுப்பியது. தாயகத்தில் மக்கள் கஷ்டப்படும் போது இவ்வாறான ஒன்றுகூடல் தேவையா? இந்தப் பணத்தை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாடசாலைக்கு அனுப்பியிருந்தால் பயனுள்ளதாக இருந்திருக்கும். இவ்வாறு பல மாதிரியான வடிவங்களில் எண்ணங்கள் தோன்றியது. எண்ணங்கள் எந்த மாதிரியும் தோன்றலாம். ஆனால் அதற்கு சரியாக காரண காரியங்களை அறியும் போது ஏற்றுக் கொள்ளும் மனப்பக்குவம் வருவது எல்லோருக்கும் இயல்பானதொன்றாகும். கடந்த ஒன்று கூடலை நாம் தவறான நோக்கத்தில் திட்டமிட்டு நடத்தியிருந்தால் அதன் பின்பு எம்முடன் இணைந்த அங்கத்தவர்கள் தொகை குறைந்திருக்கும். மாறாக முன்பு இருந்தவர்களைவிட பல அங்கத்தவர்கள் எம்முடன் இணைந்து கொண்டார்கள். அதுமட்டுமன்றி நாம் எடுத்த செயல் திட்டங்களுக்கு பூரண ஆதரவு தந்தது மட்டுமன்றி, எம் முன்மாதிரியை பார்த்து மற்றைய புலம் பெயர்ந்த நாடுகளில் வாழும் நம் பாடசாலை பழைய மாணவர்களும் தம் கவனத்தை எம் பாடசாலையின் பக்கம் திருப்பி பல உதவிகளும் புரிந்து வருகின்றனர். இதைத்தான் நாம் எதிர்பார்த்தோம். அது இன்று நிறைவேறியது. தொடர்ந்தும் எம்பாடசாலை சிறப்புடன் திகழ பல திட்டங்களை செயல்படுத்தவுள்ளோம். இதற்கு அங்கத்தவர்களதும், மேலும் இதுவரை அங்கத்தவர்களாக சேராதவர்கள் எம்முடன் இணைவதன் மூலமும் தான் எமது செயல்திட்டங்கள் செயல் வடிவம் பெறும். மேலும் மேலும் புதிய அங்கத்தவர்களை இணைத்துக் கொள்வதன் மூலம், இதை எம் கிராமத்தை பிரிதிநிதித்துவப்படுத்தும் ஒரு அமைப்பாக மாற்றுவது எமது எதிர்கால நோக்கமாகும். அத்துடன் எமது இளம் சந்ததியினர் எம் மண்ணின் பெருமையையும், தொடர்புகளையும் விட்டுவிடாது தொடர இவ் ஒன்றியத்தின் உறுதியான வளர்ச்சியினூடாகவே நாம் செயலாற்ற முடியும் என்பதில் எமக்கு அசையாத நம்பிக்கையுண்டு.

இந்த ஆண்டின் செயல்திட்டமாக நாம் முன்வைப்பது, எமது பாடசாலையின் பொன்விழா. அச்சமயத்தில் ஓர் பொன்விழா நினைவு மண்டபத்தை அமைத்துக் கொடுப்பதுதற்கும் திட்டமிட்டுள்ளோம். அதற்காக ஒரு விஷேட பொதுக் கூட்டத்தை கூட்டி தீர்மானிக்கவுள்ளோம். இதற்கு உங்கள் அனைவரதும் ஒத்துழைப்பினையும் எதிர்பார்த்து நிற்கின்றோம். நீங்கள் நல்கும் ஒவ்வொரு சிறு உதவியும் பாடசாலைக்கு பெரும் பங்களிப்பாக சென்று சேரும். இதற்கு பாடசாலை நிர்வாகமும் எம்முடன் ஒத்துழைத்து செயல்படும். கட்டிட வசதிகள் அரசு செய்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொடுக்கும் என எதிர்பார்த்தாலும் பூரணமான உதவி கிடைக்க மிக நீண்ட நாட்கள் எடுக்கலாம். அதுவரையும் எம் பாடசாலையின் அல்லல் தீர்க்க எம் உதவி எம் பாடசாலைக்கு தேவைப்படுவதால், இப்பாரிய திட்டத்தை முன்னேடுத்துள்ளோம். ஏற்கனவே எம்மால் பூர்த்தியாக்கப்பட்ட திட்டங்கள் போல் இதனையும் சிறப்பாக செயல்படுத்த உங்கள் அனைவரதும் உதவி தேவை என்பதை தெரியப்படுத்துகின்றோம்.

தொடர்ந்து எம் ஒன்றிய செயல்பாட்டில் பெண் உறுப்பினர்களின் பங்களிப்பும், செயல்பாடும் மிக குறைவாக இருப்பதால் எதிர்காலத்தில் அதையும் கருத்தில் கொண்டு செயற்படவுள்ளோம். மற்றும் விளையாட்டு துறையில் ஒரு குழுவை அமைத்து பயிற்ச்சி அளித்து வருகின்றோம். விரைவில் அதை ஒரு நிரந்தர விளையாட்டு குழுவாக உருவாக்கவுள்ளோம். எம்மிடையே உள்ள வேற்றுமைகளை மறந்து எல்லோரும் ஒற்றுமையாக, இச்சங்கம் நின்று நிலைபெற்று வளர உதவுமாறு அன்புடன் கேட்கின்றோம். ஆயிரத்துக்கு மேற்பட்ட எம் பாடசாலை பழைய மாணவர்கள் இங்கிருந்தும் இன்றும் இருநூறுக்குட்பட்ட அங்கத்தவர்களே எம்முடன் இணைந்துள்ளார்கள். இவர்களின் வருடாந்த அங்கத்துவ பணமாக தலா £25.00 ஐக் கொண்டே பல செயல் திட்டங்களை செயல்படுத்துகின்றோம். மேலும் எம்மால் நடத்தப்படுகின்ற ஒன்றுகூடல்களுக்கு அங்கத்துவ பணத்தில் இருந்து ஒரு சிறு தொகை கூட செலவு செய்யவில்லை என்பதை தெரிவிப்பதுடன், அது முழுக்க முழுக்க பாடசாலை முன்னேற்றத் திட்டங்களுக்கும் மற்றும் நிர்வாக செயல்பாடுகளுக்குமே செலவு செய்யப்படுகின்றது. ஆகவே எம்முடன் இணைந்து எம் ஒன்றியத்தை பலப்படுத்துமாறு அன்புடன் கேட்டுக் கொள்கின்றோம்.

"ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு"

நிர்வாகம்
18-01.03


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நிகழ்ச்சிகள்

**மங்கள விளக்கேற்றல்**
**தமிழ்த்தாய் வணக்கம்**
**வரவேற்புரை**
**தலைமையுரை**
**பிரதம விருந்தினர் உரை**

| | |
|---|---|
| **பாட்டு** | சதிஸனன் ஸ்ரீஸ்கந்தராசா<br>இறட்னாங்கி இரத்தினராசா<br>சிந்துஜா தவராசா<br>ஹனுசியா குணசீலன்<br>பிரியங்கா சத்தியசீலன்<br>கனுஷியா அருள்ராசா |
| **கவிதை** | பீதாம்பரம் சிவானந்தம் |
| **பாட்டு** | நிரோஷன் குணசீலன்<br>தமிழினி இரத்தினராசா<br>அகானா மோட்சானந்தம்<br>கிருசிகா சத்தியசீலன் |
| **நன்றியுரை** | |
| **வாத்தியவிருந்து** | ஹிருஸ்சன் தவசீலன்<br>யுவான்சன் மகேஸ்வரன்<br>நிஷாந்தன் வில்வராசா<br>ஜோதிகா மோட்சானந்தம்<br>பிரமிளா பரமராஜா<br>துஷ்யாயணி அமிர்தேஸ்வரன் |
| **பாட்டு** | இராவனியா பரராசசிங்கம்<br>ஜோதிகா மோட்சானந்தம்<br>ஹம்சனியா ஸ்ரீஸ்கந்தராசா<br>அபிராமி பரராசசிங்கம் |
| **பாட்டு** | பிரசாந்த் ஸ்ரீதரன்<br>சதீஸனன் ஸ்ரீஸ்கந்தராசா<br>நிரோஷன் குணசீலன்<br>ஜோதிகா மோட்சானந்தம்<br>அகானா மோட்சானந்தம் |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**நடனம்**
நிரோஷன் சிவபாதசுந்தரராஜா
பிரியந்தன் தவசீலன்
தனா. சி

**இடை வேளை**

**நாட்டிய நாடகம்**

வினோஜிதா பாலச்சந்திரன்
ஊர்மிளா பரமராஜா
மோகனாங்கி தனபாலசிங்கம்
தட்சாயணி அமிதேஸ்வரன்
ஹம்சனியா ஸ்ரீஸ்கந்தராசா
ஜோதிகா மோட்சானந்தம்
பிரம்மிளா பரமராஜா
சிந்துஜா தவராசா
அகானா மோட்சானந்தம்
தமிழினி இரட்ணராசா
இறட்ணாங்கி இரட்ணராசா
கிரிஸ்ரினா ஜெயபாலன்
நிஷாந்தன் வில்வராசா
ஜோதிகா மோட்சானந்தம்
கனுசியா அருள்ராசா
கர்சிஜா கந்தரத்தினம்

**காத்தவராயன் நாடகம்**

குகதீஸன் இராசரத்தினம்
குகதாஸ் செல்லையா
லோகேஸ்வரன் சின்னமணி
ரவிச்சந்திரன் விசுவலிங்கம்
சண்முகநாதன் ஜெயபாலன்
ஜெயரூபன் விவேகானந்தன்
தருமலிங்கம் இளையதம்பி
பாஸ்கரன் திருநாவுக்கரசு

**கலைநிகழ்ச்சிகளில் பங்கேற்றோர் கௌரவிப்பு**
**பாடசாலைக் கீதம்**

நிகழ்ச்சிகளைத் தொகுத்து வழங்குபவர்கள்
சி.பீதாம்பரம், த. ஸ்ரீபாஸ்கரன்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

MILAN FOOD & WINE

S.Jenovias

19 Leietham Court Road

Streatham Hill

SW16 2ND.

Tel: 020 8677 7756

SPAR

News Agent & Groceries

S.Kantharathnam

1C Baraganza Street

London SW17 3RD

Tel: 020 7735 2732



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புலம் பெயர்ந்த நாடுகளில் பழைய மாணவர்களும் அவர்களின் பங்களிப்புகளும்

"பெற்ற தாயும் பிறந்த பொன்னாடும் நற்றவ வானிலும் நானிசிறந்ததுவே"

மனிதகுலம் நாகரீக வளர்ச்சிபெற ஆதரவாக இருந்தது காலமாற்றத்தினாலும் அறிவு பரிணாமத்தினாலும் மனிதன் பெற்ற அறிவு தான். இன்று மற்ற ஜீவராசிகளை விட மனித இனம் மாண்புடை ஓர் இனமாக மாறியுள்ளது. உயிரினக் கூர்ப்பில் இறுதியாக தோன்றிய மனிதன் தனக்குமுன் தோன்றிய உயிர்களை கட்டி ஆளும் வல்லமை பெற்றது அவன் அறிவாற்றல் முதிர்வினாலேயேயாகும். இன்று மனிதனுடைய அறிவை வளர்க்கும் ஓர் அங்கமாகவும் வாழ்வின் முக்கிய அம்சமாகிய எமது இளமைக் காலத்தை ஒழுங்குபடுத்தும் ஒரு நிலையமாகவும் அமைவதில் அவன் கல்வி கற்ற பாடசாலை மிகமுக்கிய இடத்தை வகிக்கின்றது. தூய்மையான மனதில் கபடமற்ற அந்த சிறுவயதில் எம் எதிர்காலத்தையும் அறிவையும் நாம் வளர்க்க அடிஎடுத்து வைத்த பாடசாலையில் எமக்கு கிடைத்த இனிய கசப்பான அனுபவங்கள் அந்த இளவயதில் நாம் புரிந்த சாதனைகள், வாழ்வின் முன்னேற்றத்திற்காக நாம் பயன்படுத்திய சந்தர்ப்பங்கள், பயன்படுத்தத் தவறிய சந்தர்ப்பங்கள், அந்த இளவயதில் சாதிமத பேதங்களை பாராட்டாது பழகியவர்கள் எல்லாம் சமம் என்று பழகிய பாடசாலை பருவம் எம் எல்லோர் வாழ்விலும் மறக்கமுடியாத இனிய சுகமான அனுபவங்கள். உலகில் பெரும் பாலான மனிதர்களுக்கு உழைக்காது உண்ணும் பாக்கியமும், தேடாது அனுபவிக்கும் பலனும் கிடைப்பது பெரும்பாலும் பாடசாலைப் பருவத்திலே யேயாகும். இயந்திர மயமான உலகில் இன்று ஓடிக்கொண்டிருக்கும் நாம் எப்படி அந்த பருவத்தின் அந்த சுகமான அனுபவங்களை மறக்க முடியும். அந்த அனுபவத்தை கட்டாயமாக தந்த பெருமை எமது பாடசாலைகளையே சாரும். எம்மை வளர்த்த பெற்றோர் பெரியவர்கள் எப்படி எம்மால் காப்பாற்றப்படுகின்றார்களோ அவ்வாறே நாம் கற்ற பாடசாலைகளும் காப்பாற்றப்பட வேண்டும் என்பதை யாரும் மறப்பதில்லை. அங்கு அவர்கள் வாழும் சூழ்நிலை, தொடர்புகள் என்பவற்றைப் பொறுத்தே அந்நிலை சாதக பாதகமாக அமைகின்றது. இந்த வகையில் எல்லோருக்கும் தாம் கல்விகற்ற பாடசாலையை பெருமைக் குரியதாக்கவே விரும்புவார்கள். குறிப்பாக கல்வி கற்று பாடசாலையை விட்டு வெளியேறிய பின்பே பாடசாலையின் அருமையும் நாம் பெற்ற பலாபலன்களும் புரிகின்றது. பயனடைந்தவர்கள் தாம் பெற்ற பயன் தமது சந்ததியும் பெற வேண்டும் என மேலும் பாடசாலையை முன்னேற்ற உதவி புரிவார்கள் பலனடைய தவறியவர்கள் தாம்விட்ட தவறை தமது சந்ததியும்விடக்கூடாது. என்பதற்காக தமது பிள்ளைகள் படிக்கும் பாடசாலையின் தரம் உயர வழிவகுப்பார்கள். ஆக ஒருவிடயத்தில் எதிரான போக்கை கொண்ட இருவர் ஒரு இலக்கை வைத்து பாடுபடும் விடயம் பாடசாலை முன்னேற்றத்துக்கு பழைய மாணவர்களின் பங்களிப்பு என்பதாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழத்தைப் பொறுத்தவரை அதிலும் தமிழ் மக்களை பொறுத்தவரை கடந்த காலங்களில் பாடசாலைகளை விட்டு வெளியேறிய பின்பும் பாடசாலையின் பழைய மாணவர்களாகியவர்கள் தொடர்ந்தும் பாடசாலை முன்னேற்றத்தில் அக்கறை கொண்டவர்களாக இருக்கின்றார்கள். இந்த வகையில் கடந்த மூன்று தசாப்பதங்களாக ஈழத்தில் இருந்து சர்வதேச நாடுகளில் புலம் பெயர்ந்து வாழும் மக்கள் தாம் வாழ்ந்த ஊரையும் தாம் கல்வி கற்ற பாடசாலையையும் முன்னேற்றுவதற்காக தம்மாலான உதவிகளை தமது வசதிக்கேற்பவும் சூழ்நிலைக்கேற்பவும் புரிந்து அல்லலுறும் தாயகத்தில் தம் உறவுகளின் துயரிலும் முன்னேற்றத்திலும் பங்கொடுத்துக் கொண்டிருக்கின்றார்கள் என்பது கண்கூடு.

கவலைகள் ஏதுமின்றி குடும்பத்துடன் உறவுகளுடன் நண்பர்களுடன் குதூகலமாக வாழ்ந்தவர்களைக் கொடுமையான உள்நாட்டு யுத்தத்தால் ஊரைவிட்டு நாட்டைவிட்டு அந்நிய நாடுகளில் அகதிகளாக அடைக்கலம் புகுந்தவர்கள் விரும்பியோ விரும்பாமலோ மேற்கத்தைய நாடுகளின் கலாச்சார பொருளாதார கூட்டமைப்பிற்குள் தம்மையும் புகுத்தி கட்டாயமாக ஓய்வில்லாத, தனிமையான இயந்திர மய வாழ்வில் ஈடுபடவேண்டிய சூழல் ஏற்பட்ட காரணத்தால் தாம்வாழ்ந்த இனிமையான அந்த ஊர் நினைவுகளையும் இளமைக்காலத்தையும் நினைவு மீட்டிக்கூட பார்க்க நேரமில்லாத நிலையில் தம்மிடையே வருடத்தில் ஓரிரு நாளாவது ஊர் உறவுகள் நண்பர்களையும், மறந்து போன உறவுகளையும் புதுப்பிக்க புலம் பெயர்ந்த நாடுகளில் பழைய மாணவர்கள் அமைப்புகளை தோற்றுவிக்க வேண்டிய கட்டாய தேவையின் காரணத்தால் புலம் பெயர்ந்த நாடுகளில் ஆரம்பத்தில் பழைய மாணவர் அமைப்புகள் தோற்றம் பெற்றது. தொடர்ந்து எமது தாயக நிலைமைகள் மோசமடைய தாம் வாழ்ந்த கிராமங்களின் துயரங்களை முழுமையாக துடைக்க முடியாவிட்டாலும் தம்மாலான உதவிகளை புரிய வெளிநாடுகளில் பழைய மாணவர் சங்கங்கள் அவ்வப்போது ஏற்படுத்தப்பட்டு, காலப் போக்கில் தாமாக புனரமைப்பு வேலைத்திட்டங்களிலும் தம் கிராம முன்னேற்ற புனருத்தாரண முயற்சிகளிலும் ஈடுபாடுகின்ற நிலையினை இன்று காணக்கூடியதாக இருக்கின்றது.

ஈழத்தின் தமிழர் பிரதேசங்களைப் பொறுத்தவரை குறிப்பாக, வடக்கு, கிழக்கு, மாகாணங்களில் இருந்து உள்நாட்டு யுத்தத்தால் ஏற்பட்ட சர்வேதசம் நோக்கிய இடப் பெயர்வுகளால் உலகம் முழுதும் பரந்து வாழும் தமிழ் பாடசாலைகளின் பழைய மாணவர்களில் பொரும்பாலானவர்கள் இன்றுவரை ஏதோ ஒருவகையில் தாம் கற்ற பாடசாலைக்கு உதவிபுரிந்த வண்ணமே இருக்கின்றனர். இந்தவகையில் ஈழத்து வன்னிப் பிரதேச பாடசாலைகளில் மு/புதுக்குடியிருப்பு மகாவித்தியாலயம் ஈழத் தேசிய பாடசாலைகளில் ஒரு சிறந்த பாடசாலையாக இருப்பது எல்லோருக்கும் தெரிந்த விடயம் மட்டுமன்றி, இது நெருக்கடியான யுத்த சூழ்நிலையிலும் தன் பெருமையை இழக்காது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமிழர்களினதும், குறிப்பாக வன்னிப் பிரதேச மாணவர்களின் ஆரம்ப உயர்தரக்கல்விக்கும் பணியாற்றி நின்றது. இன்று யுத்தம் முடிவுக்கு கொண்டு வரப்பட்டு அபிவிருத்தி பணிகள் பற்றி அரசும், தமிழர் பிரதிநிதிகளும் ஆலோசனை நடத்தும் இந்நேரத்தில் இப்பாடசாலையின் எதிர்கால விரிவான அபிவிருத்திக்கு உதவியானதும் முன்னேற்றமான முற்போக்கு அம்சங்கள் உள்ளடக்கியதான திட்டமிடலை செய்து, பொன்விழா காணுதற்கு தயாராகிக்கொண்டிருக்கும் இப்பாடசாலைக்கு அரசு வழங்கும் உதவிகள் மூலம் பௌதீக வளங்களையும் (Physical Aspect) ஏனைய சில நிலையான தொடர்ச்சியான அபிவிருத்தி முயற்சிகளை பழைய மாணவர்கள் சங்கங்கள் போன்ற அரச சார்பற்ற அமைப்புக்கள் (Non Government Organizations) மூலமாகவும் செயல்படுத்துவதன் மூலம் இப்பாடசாலையை அதன் தேவைகளின் அடிப்படையில் விரைவானதொரு ஒன்றிணைந்த அபிவிருத்தியை (Integration Development) ஏற்படுத்த முடியும் என்பதில் ஐயமில்லை. இதில் ஏனைய அரச சார்பற்ற உள்நாட்டு வெளிநாட்டு நிறுவனங்களைப் பொறுத்தவரை முதலில் இப்பணியை ஆரம்பித்து அடிக்கல் நாட்டும் நிலையில் ஒவ்வொரு நாடுகளிலும் வாழும் பழைய மாணவர்களும் அவர்களின் பழையமாணவர் சங்கங்களுமே காணப்படுகின்றது. அதனை தொடர்ந்து அப்பழைய மாணவர்களின் உதவிகள் ஒருங்கிணைக்கபட்டதாகவோ அல்லது தனித்தனியான கட்டமைப்புகளுக்கு உதவி வழங்குவதன் மூலமாகவோ பாடசாலை அபிவிருத்தியில் பங்கு கொள்ள முடியும்.

பழைய மாணவர் சங்கங்கள் என்பது புலம் பெயர்ந்த நாடுகளில் இன்று ஒரு பலம் வாய்ந்த கூட்டுறவு அமைப்புகளாக பரிணாமம் பெற்று வருவதை அவதானிக்க முடிகிறது. பழைய மாணவர் சங்கங்கள் என்பது புலம் பெயர்ந்த நாடுகளில் வருடம் ஒருமுறை நத்தார் புதுவருடத்துக்கு கூடி உண்டு, கூத்தாடி மகிழும் அமைப்பு என்று முன்பு பலராலும் பேசப்பட்டுவந்த நிலைமாறி இன்று ஈழத்து பாடசாலை பழைய மாணவர் சங்கங்களைப் பொறுத்தவரை எம் கலைபண்பாட்டு கலாச்சார அம்சங்களை தொடர்ந்தும் வெளிநாடுகளில் குறியீட்டு அளவிலாவது பேணுவதற்கும் அவற்றை வளர்பதற்கும் காரணமாக இருக்கும் அமைப்புக்களாக இவை இன்று காணப்படுகின்றன. அதுமட்டுமன்றி இன்று பெரும்பாலான பழைய மாணவர் சங்கங்கள் தமக்கென முறையான சட்ட ரீதியான வங்கிக்கணக்குகளையும் ஒரு நிர்வாக கட்டமைப்பையும் கொண்டு, ஒரு சட்டபூர்வ அங்கீகாரம் உள்ள நிறுவனமாக உருவாகுவதற்கான அடித்தள அமைப்பை உருவாக்கி வருவதை அவதானிக்க முடிகின்றது. ஐக்கிய இராச்சியத்தில் இயங்கும் பெரும்பாலான பழைய மாணவர் சங்கங்கள் இன்று தமக்கென ஒரு நிர்வாக கட்டமைப்பை கொண்டு இயங்குகின்றது. இவ்வாறு விருத்தி அடைந்து வரும் புலம் பெயர்ந்த நாடுகளில் இருக்கும் பழைய மாணவர் சங்கங்கள் தாம் கல்விகற்ற பாடசாலையை சரியான திட்டமிடலுடன் சரியான நடைமுறைக்கு சாத்தியமான விருத்தி திட்டங்களை முன்னெடுக்க தாயகத்தில் பாடசாலை அபிவிருத்தியில் அக்கறையுள்ள பழைய


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாணவர்களாகிய பெற்றோரும் கட்டாயமாக பாடசாலை அதிபர், ஆசிரியர்கள், பாடசாலை அபிவிருத்தி சங்க உறுப்பினர்கள் புலம் பெயர்ந்த நாடுகளில் வாழும் பிற பாடசாலை பழைய மாணவர் சங்கங்களுடன் தொடர்பு வைத்திருப்பதும், சரியான பாடசாலை பற்றிய தகவல்களையும் தரவுகளையும் வழங்குவதுடன் அத்தியாவசிய தேவைகள் அடிப்படையிலான திட்டங்களை வகுத்து புலம்பெயர்ந்த நாடுகளில் உள்ள பழைய மாணவர் அல்லது பழைய மாணவர் சங்கங்களின் உதவிகளை பெற்று பாடசாலை விருத்தியை முன்னெடுப்பதன் மூலம் புலம் பெயர்ந்த நாடுகளில் வாழும் பழைய மாணவர்களுக்கு தம் பாடசாலையினதும், பிரதேசத்தினதும் தொடர்பு அற்றுப் போகாமலும், இக்கட்டான நெருக்கடி சூழலில் பாடசாலைகள் இயங்குவதற்கும் இது மிகவும் அத்தியாவசியமானதொரு தேவை என்பதுடன், புலம் பெயர்ந்த நாடுகளில் இருந்து மிகுந்த சிக்கல்களுக்கும் நெருக்கடிகளுக்கும் மத்தியில் வாழும் பழைய மாணவர்களால் கடினமான சூழ்நிலைகளில் சேர்த்து அனுப்பப்படும் ஒவ்வொரு சதமும் சரியான முறையில் பாடசாலை அபிவிருத்திக்கு பங்கெடுக்க இது மிகவும் அத்தியாவசியமான தேவையும் கூட.

ஆகவே புலம் பெயர்ந்த நாடுகளில் பழைய மாணவர்களும் அவர்தம் சங்கங்களும் நெருக்கடி சூழலிலும் சரி, போர்ச்சூழல் ஓய்வுக்கு வந்த காலத்திலும் சரி அவர்களின் உதவி ஆலோசனை என்பன தாயக பாடசாலைகளின் அபிவிருத்திக்கு உதவியாக இருப்பதுடன் புலம் பெயர்ந்தவர்களுக்கும் அவர்தம் உறவுகளுக்கும் தாயகத்துடனான ஒரு இறுக்கமான நேரடித்தொடர்பை வலுவாக தொடர புலம் பெயர்ந்த நாடுகளில் காணப்படும் பழைய மாணவர் சங்கங்கள் மிக முக்கியமான பங்களிப்பை நிறுவன ரீதியாக வழங்குவதுடன் அவரவர் புலம் பெயர்ந்து வாழும் நாடுகளிலே தமது ஊரினதும் பாடசாலையினதும் பெருமையையும் வெளிப்படுத்தி அதனுடன் இணைந்ததாக மேலைத்தேச கலாச்சார பரிணாமங்களை தாயகம் தவிர்ந்த வெளிச்சூழலில் வாழும் எம் மக்களின் சந்ததிகள் அறிந்து அதை பின்பற்றி பாதுகாக்கும் முக்கியமான பணியை வெளிநாடுகளில் இப் பழைய மாணவர் சங்கங்கள் ஆற்றிவருவதுடன், புலம் பெயர்ந்த நாடுகளில் தம்மிடையே ஓர் இணைப்பை ஏற்படுத்தி வேலைத்திட்டங்களை மேற்கொள்ள இவர்களின் பங்களிப்பு மிகவும் முக்கியமான தொன்றாக காணப்படுகின்றது.
“ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு”

ஆக்கம் திரு. ச. முருகையா
முன்னாள் உதவி விரிவுரையாளர்
புவியியல் துறை
யாழ் பல்கலைக்கழகம்
இலங்கை.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# செயலாளரிடமிருந்து . . .

பல ஆண்டுகளின் முயற்சிக்குப்பின் 2000ஆம் ஆண்டில் உருவாக்கப் பட்ட எமது ஒன்றியம் 2003ம் ஆண்டு இரண்டாவது கலை மாலையை சந்திப்பதில் நான் பெருமகிழ்ச்சியடைகிறேன். இவ்வொன்றியத்தையும் இக்கலைமாலையையும் நாம் ஏன் உருவாக்கினோம், எவ்வாறு செயல்படுகின்றோம், இங்கிருக்கும் எமது பழைய மாணவ மாணவிகளின் பங்களிப்பு என்ன, இதை நாம் ஏன் செய்ய வேண்டும் என்றெல்லாம் எமக்குள் நாமே ஒரு முறை கேள்வி எழுப்பிப் பார்ப்போம். முன்னோர் விட்ட சிறு சிறு தவறுகளினால் தமிழினமாகிய நாம் இன்று எமது சுதந்திரங்களையெல்லாம் இழந்து, ஏன் பெற்ற தாய் தந்தையரைக்கூட பிரிந்து இருக்கின்றோம். இவைகள் எல்லாம் எதற்காக? எமது ஒற்றுமை இறைமைப் பாட்டின் பிளவால் அல்லவா! இவற்றை நாம் ஏன் ஒரு முறை சிந்தித்துப் பார்க்க கூடாது? எத்தனை விளக்கங்கள், எத்தனை சாட்டுக்கள், எத்தனை நியாயங்கள் வேண்டுமானாலும் சொல்லிக் கொள்வோம். அத்தனைக்கும் பின்னால் உண்மை உயிர்த்த படியே தான் இருக்கப் போகின்றது.

வரம்புயர நீருயரும்
நீருயர நெல்லுயரும்
நெல்லுயர குடியுயரும்
குடியுயர கோனுயர்வான்

என்று சோழமன்னனை வாழ்த்திய ஔவையை மனதில் கொண்டு நாம் எமது ஊருக்கும், எமக்கு கல்வி தந்த பாடசாலைக்கும் எம்மால் முடிந்தவரை உதவி செய்வோம் அதில் நானும் உங்களோடு ஒருத்தனாக நிற்பேன் என்று உறுதி கூறுகின்றேன்.

எமது நிர்வாகத்தின் செயற்திட்டங்களை எத்தனையோ நெருக்கடிக ளுக்கும் பிரச்சனைகளுக்கும் மத்தியிலும் குறிப்பிட்ட நேரத்தை ஒதுக்கி என்னோடு செயல்பட்டு வரும் அனைத்து நிர்வாக உறுப்பினர்களுக்கும் நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றேன். எங்களது செயல் திட்டங்களுக்கு முக்கிய பங்கை வகிக்கும் எமது பழைய மாணவ



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாணவிகளுக்கும் நலன் விரும்பிகளுக்கும் அங்கிருந்து எமது திட்டங்களை திறன்படச் செய்து முடித்துத் தருகின்ற எமது புதுக்குடியிருப்பு பாடசாலை அபிவிருத்திச் சங்க உறுப்பினர்களுக்கும், பாடசாலை அதிபர் அவர்களுக்கும் எமது ஒன்றியத்தின் சார்பில் நன்றியைத் தெரிவித்துக் கொள்ளுகின்றேன். எமது கலைமாலை நிகழ்வுகளுக்கு தமது முழு ஆதரவை வழங்கி வருகின்ற எமது வர்த்தக நிறுவனத்தினருக்கும், ஏனைய செலவினங்களுக்கு தனியாகவும், கூட்டாகவும் ஆதரவு வழங்கிவரும் அன்புள்ளங்களுக்கும், அத்தோடு இம் மலரினை சிறந்த முறையில் அச்சுப் பதித்துத்தந்த வாசன் அச்சகத்தாருக்கும் எமது நன்றிகள்.

மேலும் எமது ஒன்றியத்தின் வளர்ச்சிக்கு ஆக்கங்களும், வாழ்த்துக் களும், ஆலோசனைகளும் நல்கிய அனைவருக்கும் இந்த நேரத்தில் நன்றி கூறுவதுடன், ஒன்றியத்தின் வளர்சியிலும் பாடசாலையின் அபிவிருத்தியிலும் ஆர்வமுள்ள அனைவரையும் தொடர்ந்து பங்களிப்பையும் ஒத்துழைப்பையும் நல்குமாறு நிர்வாகத்தின் சார்பில் அன்புடன் கேட்டுக்கொள்ளுகின்றேன்.

"விழிப்புடன் இருப்போம்
சிந்தைகளை விந்தைகளாக்கி செய்துமுடிப்போம்"

அன்புடன்
செயலாளர்
த. ஸ்ரீபாஸ்கரன்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# GRANTHAS

Off Licence

**R.Renuthas**

**200 Ipswich Road, Colchester**

**Essex CO4 4EP**

**T.P: 01206 504 227**

# DEPTFORD

News Agent

**38 Deptford Broadway**

**Deptford**

**SE8 4PQ**

**T.P 020 8692 2497**




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# LONDIS

Super Market



U.Sivanessan
303 Southern Lane
Catford SE6
Tel :
020 8698 1386

# MACK'S MINI MARKET

உங்கள் அனைத்துவகை நுகர்வுத்தேவைகளுக்கும்
நாட வேண்டிய ஒரே இடம்...

*T.Thanabalasingham*
*196 Kent House Road*
*Beckenham, BR3 1JN*
*T.P: 020 8778 0559*
*Fax: 020 8778 1689*




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## விளையாட்டுக் குழு

திரு.செ. பரமராஜா - தலைவர்
திரு.நா. விஜயலிங்கம்
திரு.சி. நாகேஸ்வரன்
திரு.மு. வசிகுமார்
திரு.த. கேசவன்
திரு.த. பகீரதன்
திரு.சி. ஜெயசீலன்
திரு.சே. சேதுருபன்
திரு.செ. விஸ்வராசா
திரு.ச. சண்முகலிங்கம்
திரு.ஆ. கஜந்தன்
திரு.க. பற்குணன்
திரு. பிரபாகரன்
திரு. சுபாஸ்
திரு. ஜெயம்
திரு.ச. வசந்தருபன்
திரு.பா. குமார்
திரு.சு. சதீஸ்குமார்




# SANDHERSON

*The Best House Wares In The High Street*

**S. BALACHANDIRAN**
**38-40 Lewisham High Street**
**LEWISHAM SE13 5JH**
**020 8318 2030**




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# FIG'S

Convenience Store & Off Licence

**R.Sivakumar**

**101, Spring Bank Road**
**Hither Green, SE13 6SS**
**T.P: 020 8695 5861**

# FOOD & WINE

**N.Puvanendran**

**42 Chatterton Road**
**Brombley BR2 9QE**
**T.P: 020 8460 1237**




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# M/Puthukkudiyiruppu Maha Vidiyalayam O.S.A. UK

## COMMETTEE MEMBERS - 2002 - 2003

***PRESIDENT***

*MR. T. THANABALASINGHAM*

***SECRETARY***

*MR. T. SRIPASKARAN*

***TREASURER***

*MR. S. THAVASEELAN*

***VICE PRESIDENT***

*MR. S. ARULRASA*

***ASST. SECRETARY***

*MR. S. SATHIYASEELAN*

*MR. S. MURUGAIAH*
*MR. T. SRITHARAN*
*MR. S. KETHEESWARAN*
*MR. V. EASWARAN*
*MR. S. PARARAJASINGHAM*
*MR. S. SRIRANGARASA*
*MR. T. BASKARAN*
*MR. N. PERINPANAYAGAM*
*MR. S. SATKUNASEELAN*

***AUDITOR***

*MR. P. KIRUSNARAJAH*


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## M/PUTHUKKUDIYIRUPPU MAHA VIDIYALAYAM OLD STUDENT ASSOCIATION, CURRENT MEMBERS UP TO 31.12.2002

1. Mr.S.Murugaiah
2. Mr.T.Srithyaseelan
3. Mr. S.Sathyaseelan
4. Mr. V.Easwaran
5. Mr. T.Sripaskaran
6. Mr. P.Krishnarasa
7. Mr. S.Kunaseelan
8. Mr. S.Jayaseelan
9. Mr. S.Keatheswaran
10. Mr. S.pararajasingam
11. Mr. K.Vimaleswaran
12. Mr. T.Thanpalasingam
13. Mr. C.Ratnarajah
14. Mr. V.Sivanesan
15. Mr. S.Peethamparam
16. Mr. S.Panneerselvan
17. Mr. B.Santhakumar
18. Mr. S.Baskkaran
19. Mr. S.Kunaseelan
20. Mr. M.Kirupamoorthy
21. Mr. V.Thayaparan
22. Mr. S.Thavarasa
23. Mr. S.Paramasivam
24. Mr. L.Sutharsan
25. Mr. S.Baskaran
26. Mr. K.Logaseelan
27. Mr. M.Perinpanayagam
28. Mr. M.Sathyarupan
29. Mr. K.Sathyaseelan
30. Mrs. Kamalanathan Sumathy
31. Mr. K.Kuneswaran
32. Mr. S.Thavaseelan
33. Mr. S.Vilavarajah
34. Mr. S.Paramajarah
35. Mr. S.Satheeskumar
36. Mr. S.Parameswaran
37. Mr. K.Patkunan
38. Mr. V.Paramasivam
39. Mr. R.Kantharuban
40. Mr. S.Vasantharuban
41. Mr. M.Sriskantharasa
42. Mr. B.Sukirtharan
43. Mr. S.Gengatharan
44. Mr. K.Thanapalasingam
45. Mr. J.Shunmugarakavan
46. Mr. S.Navaratnam
47. Mr. N.Puvananthirarajh
48. Mr. B.Gnanavel
49. Mr. K.Keatheswaran
50. Mr. S.Sabeasan
51. Mr. T.Sothilingam
52. Mr. S.Sathiyaseelan
53. Mr. T.Nagatheepan
54. Mr. T.Baskaran
55. Mr. R.Sivakumar
56. Mr. A.Asogan
57. Mr. T.Katheeswaran
58. Mr. A.Balandran
59. Mr. V.Kirubakaran
60. Mr. S.Naganathan
61. Mr. S.Kanagarajah
62. Mr. K.Thavashesan
63. Mr. K.Senthuran
64. Mr. S.Sivanaswaran
65. Mr. J.Sanmuganathan
66. Mr. V.Ravichandran
67. Mr. S.Sanmugalingam
68. Mr. T.Mageandram
69. Mr. K.Kantharuban
70. Mr. N.Arasaratnam
71. Mr. S.balachandran
72. Mr. M.Vasikumar
73. Mr. T.Thanarajah
74. Mr. A.Parthipan
75. Mr. S.Kantharatnam
76. Mr. V.Ravichandran
77. Mr. S.Kangeswaran
78. Mr. S.Arulrasa
79. Mr. R.Karunakaran
80. Mr. S.Srirangarasa
81. Mr. K.Vipulanathan
82. Mr. K.Sellaiya
83. Mr. T.Jeyabalan
84. Mr. A.Keatheaswaran
85. Mr. S.Kugathas
86. Mr. V.Thavaruban
87. Mr. V.Ravindran
88. Mr. S.Sukumar
89. Mr. P.Kunaseelan
90. Mr. S.Amirtheaswaran
91. Mr. P.Makeanthirarajah
92. Mr. P.Swarnasingam


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

93. Mr. N.Sivapathasundararajah
94. Mr. S.Pusparajah
95. Mr. T.Sathyaseelan
96. Mr. A.Kayanthan
97. Mr. M.Keatheasawaran
98. Mr. N.Puvanentharan
99. Mr. C.Sriskantharajah
100. Mr. K.Yogeswaran
101. Mr. S.Kiruba
102. Mr. K.Easwaran
103. Mr. S.Ihayarasa
104. Mr. S.Tharmeswaran
105. Mr. S.Parameaswaran
106. Mr. V.Nirmalan
107. Mr. K.Thavakumar
108. Mr. E.Tharmalingam
109. Mr. A.Maheaswararajah
110. Mr. S.Modchananantham
111. Mr. K.Preamkumar
112. Mr. T.Mageandram
113. Mr. P.Rajeaswaran
114. Mr. A.Kaneanthirarajah
115. Mr. S.Sathirakumar
116. Mr. S.Tharmaseelan
117. Mr. T.Santharajah
118. Mr. V.Sasiruban
119. Mr. K.Jeyavinthan
120. Mr. K.Sivakumar
121. Mr. A.Vilvarajah
122. Mr. N.Satkunarajah
123. Mr. K.Gengeswaran
124. Mr. P.Akilan
125. Mr. S.Sathaneasan
126. Mr. P.Ratnasingam
127. Mr. N.Thavarasa
128. Mr. V.Sribaskaran
129. Mr. N.Aravinthan
130. Mr. S.Thirukumaran
131. Mr. S.Matheaswaran
132. Mr. N.Selvamanickam
133. Mr. S.Kunalingam
134. Mr. M.Selvaraja
135. Mr. K.Amuthaseelan
136. Mr. S.Niranjan
137. Mr. N.Murugeswaran
138. Mr. V.Kunalingam
139. Mr. M.Senthuran
140. Mrs. M.Vijayamalar
141. Mr. A.Senthilkumaran
142. Mr. S.Vasantharuban
143. Mr. R.Reanuthas
144. Mr. R.Selvanayagam
145. Mr. N.Indran
146. Mr. N.Sivalingam
147. Mr. E.Tharmalingam

## M/PUTHUKKUDIYIRUPPU MAHA VIDIYALAYAM OLD STUDENT ASSOCIATION ACCOUNTS (22.09.2002 TO 31.12.2002)

| | | Expenses | Income |
|---|---|---|---|
| 22.09.02 | Balance b/d | | £4.17 |
| 22.09.02 | Donation | | £20.00 |
| 22.09.02 | Sivan Temple Hall | £20.00 | |
| 30.09.02 | Video Sale | | £340.00 |
| 06.10.02 | Sivan Temple Hall | £20.00 | |
| 31.12.02 | Membership Fund | | £2,300.00 |
| | Total Income | | £2,664.17 |
| | Total Expenses | £40.00 | |
| | Balance | | £2,624.17 |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# RED LION WINE

Off Licence & Groceries

**P.KANTHARUPAN**

**184 Hither Green Lane,**

**SE13**

**Phone: 020 8297 9777**

# COSTCUTTER

*FOOD & WINE*

**V.Nirmalan**

**54 - 56 CAMPSHILL ROAD**

**LEWISHAM**

**LONDON SE13 6QT**




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# EURO CHICKEN & PIZZA



*A new concept in fast food*

**Free Delivery**

**Tel: 020 8317 9909**

**11 Plumstead Road, Woolwich, London, SE18 7BZ.**

# Euro Cont - Food & Wine

உங்களுக்குத் தேவையான மளிகைப்பொருட்கள், இலங்கையிலும் இந்தியாவிலும் இருந்து தருவிக்கப்பட்ட உணவுப் பொருட்கள், கடல் உணவுகள், மரக்கறிவகைகள், மற்றும் சிறுவர் ஆடைகள்

15பவுணுக்கு பொருட்கள் வாங்கினால், ஒரு தமிழ்ப்படம் இலவசமாக வாடகைக்குப் பெற்றுக் கொள்ளலாம்.

**25 பவுணுக்கு மேல் பொருட்கள் வாங்கினால்**

**Free Delivery**

ஞாயிறு தோறும் பங்கு இறைச்சி ஓடர் செய்து பெற்றுக்கொள்ளலாம்

சொடெஸ்கோ வவுச்சர்கள் ஏற்றுக்கொள்ளப்படும்

**12 Plumstead Road, Woolwich, London SE18**

**Tel: 020 8854 9154 Open: Mon-Sat 6am to 11pm Sunday: 10am - 11pm**




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# LATHA SUPER COMPLEX

# லதா தமிழ்க் களஞ்சியம்

## *30 Loampit Hill, Lewisham, SE13 7SW*



பழைய **Blue Moon** தமிழ்க் கடை
புதுப்பொலிவுடன் உங்களை
வரவேற்கின்றது.

எம்மிடம் தினமும் இலங்கை, இந்திய,
பசுமையான மரக்கறிவகைகள்,
பழவகைகள், அனைத்து ரக
அரிசி வகைகள், கடலுணவுப்
பொருட்கள்,
பங்கு இறைச்சி என்பவற்றுடன்,

- மிக மலிவான விலையில், உடுப்பு வகைகள்
- சமையலுக்கான பாத்திரங்கள்
- கோயில் பொருட்கள்
- சிறு கதைகள், நாவல்கள், தமிழ் ஆங்கில சஞ்சிகைகள், சாரதிகளுக்கான தமிழ்ப் பயிற்சி நூல்
- தொலைபேசி அட்டைகள்.
- தமிழ், ஹிந்தி, சிங்கள, ஆங்கில திரைப்படங்கள், வீடியோ, ஓடியோ, **DVD.**
- ஞாயிறு மற்றும் விசேட நாட்களில் உடன் பங்கு இறைச்சி என்பவற்றைப் பெற்றுக்கொள்ளலாம்.

தொடர்புகளுக்கு - ப.குணசீலன்

**020 8265 0629**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கற்பகம்

## பல் பொருள் அங்காடி



உடன் இறக்குமதி செய்யப்பட்ட
மரக்கறி வகைகள் கடல் உணவு
வகைகள், நாளாந்த
அத்தியாவசியப் பொருட்கள்
அனைத்தும் நீங்கள் ஒரே இடத்திற்
பெற்றுக்கொள்ள நாட வேண்டிய
ஸ்தாபனம்

"மலிவுக்கு மறு பெயர் கற்பகம்
தரத்திற்கு மறு பெயர் கற்பகம்"

தொலைபேசி அட்டைகள்
ஓடியோ - வீடியோ - VCD - DVD - ஆகியவற்றை மலிவு
விலையில் பெற்றுக்கொள்ள

## கற்பகம்

## பல் பொருள் அங்காடி

ஞாயிற்றுக் கிழமைகளில் உடன் பங்கு இறைச்சி விற்கப்படும்.
உங்களது நாணயமாற்றுத் தேவைகளுக்கும் நம்பிக்கையுடன்
நாடவேண்டிய ஒரே தமிழர் ஸ்தாபனம் கற்பகம் பல் பொருள்
அங்காடி.

தொடர்புகளுக்கு : *தி.பாஸ்கரன், சி.ஞானசீலன்*

**36 Loampit Hill, Lewisham, SE13 7SW**

**020 8694 8810**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Printed by Vasan Printers - 020 8646 2885